சிறப்புநிலை பேரூராட்சி, ஆலங்குளம்

ந.க.எண். 130/2021/அ1 நாள். 06.04.2022

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

ஆலங்குளம் சிறப்புநிலை பேரூராட்சி நிர்வாக அதிகாரி அவர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்றவரால் 2022ம் வருடம் 22.02.2022 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை அடியிற் குறிப்பிட்டுள்ள வேலையைச் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவம் 21.02.2022ம் தேதி பிற்பகல் 5.00 மணி வரை வழங்கப்படும்.

## நிபந்தனைகள்

1. ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியே குறிப்பிட்டுள்ளவாறு டேவணித் தொகையை செலுத்தி ரசீது பெற்று ஷை ரசீதுகளை ஒப்பந்தப் புள்ளிகளோடு இணைத்து அனுப்ப வேண்டும்.
2. ஒப்பந்தபுள்ளி நமுனா 21.02.2022 வியாழக் கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்.
3. ஒப்பந்தபுள்ளிகள் 22.02.2022 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
4. ஒப்பந்தப் புள்ளி 22.02.2022ம் தேதி மாலை 3.30 மணிக்கு ஆஜராகியிருக்கும் டெண்டர்தாரர் முன்னிலையில் திறக்கப்படும்.
5. ஒப்பந்தப் புள்ளிகள் எவ்வித காரணம் காட்டாமலேயே நிராகரிக்க நிர்வாக அதிகாரி அவர்களுக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவருக்கு முழு அதிகாரம் உண்டு.
6. குறைந்த தொகைக்குரிய டெண்டர்கள் பரிசீலனையின்போது எடுத்துக் கொள்ளப்படும்.
7. ஒப்பந்தப்புள்ளிகளின் தேதியை மாற்றவோ, ஒத்திவைக்கவோ மறு ஒப்பந்தப்புள்ளி கோரவோ நிர்வாக அதிகாரி அவர்களுக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவருக்கு முழு அதிகாரம் உண்டு.
8. ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி மன்ற அங்கீகாரத்திற்குட்பட்டது.
9. ஜாரியான ஒப்பந்தபுள்ளிதாரர் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்து உடனடியாக வேலையை நல்ல முறையில் திருப்திகரமாக செய்து முடிக்க வேண்டும்.
10. ஜாரியான ஒப்பந்தபுள்ளிதாரர் அப்போதைக்கப்போது பொறியாளரின் தொழில் நுட்ப அறிவுரைப்படி வேலையை நல்ல முறையில் திருப்திகரமாகவும் செய்து முடிக்கப்பட வேண்டும்.
11. பேரூராட்சி மன்ற பரிசீலனை முடிந்த பின் ஜாரியாகதவர்களுடைய டேவணித் தொகையை காசோலை மூலம் வழங்கப்படும்.
12. ஜாரியானவர்களுடைய டேவணித் தொகையை தணிக்கை முடிந்த பின்பு தணிக்கை ஆட்சேபனையில்லையென்றால் வட்டியின்றி திருப்பிக் கொடுக்கப்படும்.
13. ஒப்பந்தப்படி வேலை செய்து முடிக்காவிட்டால் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து, மறு ஒப்பந்தப் புள்ளி கேட்டு அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் முதல் ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார்.

14. வேலை உத்தரவு பெற்ற ஒப்பந்தக்காரர் பணி தொடக்கம், பணி நடைபெறுதல் மற்றும் பணி முடிவுற்ற நிலை ஆகிய 3 நிலைகளில் புகைப்படங்கள் ஆவணப்படுத்தி பில் பட்டியலுடன் வழங்கப்பட வேணடும்.

15. இதர விபரங்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## 15வது நிதிக்குழு மானியம் (Tied Grant) – 2021 – 22

| வ. எண் | பணி யின் பெயர் | மதிப்பீடு (ரூ.) (இலட்சத்தில்) | டெண்டர் டெபாசிட் (ரூ.) | ஒப்பந்தப்புள்ளி படிவ கிரையத்தொகை |
|---|---|---|---|---|
| 1. | ஆலங்குளம் பேரூராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட உரக்கிடங்கிற்கு குடிநீர் வசதி, மின்சார வசதி மற்றும் பாலம் அமைத்தல் | 9.58 | 9580 | 3400 |
| | ஆலங்குளம் பேரூராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட உரக்கிடங்கிற்கு சிமெண்ட் சாலை அமைத்தல் | 9.58 | 9580 | 3400 |

### <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

4. ஒப்பந்ததாரர்கள், சேவை வரி பதிவு எண் பெற்றவராகவும்,வருமான வரி பதிவு எண் பெற்றவராகவும் இருக்க வேண்டும். இனி பதிவு எண் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அதன் விபரம் தெரிவித்திருக்க வேண்டும். இனி பெறுவதில் பிரச்சனை ஏற்படுமானால் அதற்கு இப்பேரூராட்சி பொறுப்பு ஆகாது.
5. திட்ட நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் வேலைகள் எடுக்கப்பட்டுள்ளதால், நிதி வரப் பெறுவதற்கு ஏற்ப வேலைத் தொகை முழுவதுமாகவோ, பகுதிகளாகவோ வழங்கப்படும்.
6. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடிந்த பின்னரும் புகைப்படம் எடுக்க வேண்டும். எடுக்கப்படும் புகைப்படங்கள் ஒரே இடத்தைக் காட்டும்படியாக இருத்தல் வேண்டும். எடுக்கப்படும் புகைப்படங்கள் இவ்வலுவலகத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

செயல் அலுவலர்
சிறப்புநிலை பேரூராட்சி,
ஆலங்குளம்

பெறுநர்

அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்
ஆலங்குளம் பேரூராட்சி

நகல் :-

1. திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர் அவர்கள், தென்காசி
3. உதவிப் பொறியாளர் அவர்கள், ஆலங்குளம் பேரூராட்சி தகவலுக்கு
4. நிர்வாக அதிகாரி பேரூராட்சி அலுவலகம், சுரண்டை, கீழப்பாவூர், இலஞ்சி, ஆய்குடி
5. அலுவலக விளம்பர பலகைக்கு
6. கோப்பு